இனிமையான குழந்தைகளே! பாபாவின் கட்டளை, சுயதரிசனச் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டே தனது புத்தியோகத்தை ஒரு தந்தையிடம் ஈடுபடுத்துங்கள். இதனால் விகர்மங்கள் விநாசமாகும். தலையிலிருந்து பாவச்சுமை இறங்கி விடும்.

கேள்வி: இந்தப் புருஷோத்தம சங்கமயுகத்தின் சிறப்புகள் என்னென்ன?

பதில்: இந்த சங்கமயுகம் தான் கல்யாணகாரி யுகம் - இதில் தான் ஆத்மா மற்றும் பரமாத்மாவின் உண்மையான மேளா நடைபெறுகிறது. அதைக் கும்பமேளா எனச் சொல் கின்றனர். 2. இச்சமயம் தான் நீங்கள் உண்மையிலும் உண்மையான பிராமணராக ஆகின்றீர்கள். 3. இந்த சங்கமயுகத்தில் நீங்கள் துக்கதாமத்தில் இருந்து சுகதாமம் செல்கிறீர்கள். துக்கங்களில் இருந்து விடுபடுகிறீர்கள். 4. இச்சமயம் உங்களுக்கு ஞானக்கடல் பாபாவிடம் இருந்து சிருஷ்டியின் முதல்-இடை-கடை பற்றிய முழுமையான ஞானம் கிடைக்கிறது. புது உலகத்திற்காகப் புதிய ஞானத்தை பாபா தருகிறார். 5. நீங்கள் கருப்பிலிருந்து வெள்ளையாக (தூய்மையாக) ஆகிறீர்கள்.

பாடல்: இந்தப் பாவ உலகில் இருந்து.......

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான குழந்தைகள் பாடலைக் கேட்டீர்கள். மேலும் குழந்தைகளின் புத்தியில் இது பதிந்துள்ளது - நிச்சயமாக கலியுகம் பாவங்களின் உலகம். இச்சமயம் அனைவரும் பாவங்களையே செய்து கொண்டுள்ளனர். தந்தை வந்து குழந்தைகள் உங்களுக்குக் கல்ப-கல்பமாக சத்கதி அளிக்கிறார். எப்போது தூய்மையற்ற உலகத்தை தூய்மை யாக ஆக்க வேண்டுமோ, அப்போது பதீத-பாவனர் தந்தை வருகிறார். வந்து குழந்தைகளைத் தமக்குச் சமமாக ஆக்குகிறார். தந்தையிடம் எந்த ஞானம் உள்ளது? முழு சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானம் உள்ளது. குழந்தைகள் நீங்களும் இந்த சிருஷ்டிச் சக்கரத்தை அறிவீர்கள். இந்தச் சக்கரம் முழுவதும் எப்படிச் சுற்றுகிறது? இந்த ஞானம் தந்தையிடம் உள்ளது. அதனால் அவர் ஞானக்கடல் எனச் சொல்லப் படுகிறார். அவர் தான் பதீத-பாவனர். இந்தச் சக்கரத்தை அறிந்து கொள்வதன் மூலம், சுயதரிசனச் சக்கரதாரி ஆகி பிறகு சக்கரவர்த்தி ராஜா ராணி ஆகிறீர்கள். ஆக, புத்தியில் நாள் முழுவதும் இந்தச் சக்கரத்தைச் சுற்ற வேண்டும். அப்போது உங்கள் விகர்மங்கள் விநாசமாகி விடும். பிறகு சத்யுகத்திலோ நீங்கள் இந்தச் சக்கரத்தைச் சுற்ற மாட்டீர்கள். அங்கே (சுவ) சுயத்திற்கு அதாவது ஆத்மாவுக்கு சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானம் இருக்காது. சத்யுகத்திலும் இருக்காது, கலியுகத்திலும் இருக்காது. இந்த ஞானம் சங்கமயுகத்தில் மட்டுமே உங்களுக்குக் கிடைக்கிறது. சங்கமயுகத்திற்கு மிகவும் மகிமை உள்ளது. கும்பமேளா நடத்துகின்றனர் இல்லையா? உண்மையில் இது ஞானக்கடல் மற்றும் நதிகளின் மேளா, அதாவது பரம ஆத்மா மற்றும் ஆத்மாக்களின் மேளா. அந்த மேளா பக்திமார்க்கத்தின் மேளாவாகும். இந்த ஆத்மா மற்றும் பரமாத்மாவின் மேளா இந்த அழகிய (சுகம் மற்றும் மகிழ்ச்சி அளிக்கும்) கல்யாண்காரி சங்கமயுகத்தில் தான் நடைபெறுகிறது. அப்போது நீங்கள் துக்கங்களில் இருந்து விடுபட்டு சுகத்தில் செல்கிறீர்கள். அதனால் பாபா துக்கத்தைப் போக்கி சுகம் கொடுப்பவர் எனச் சொல்லப் படுகிறார். அரைக்கல்பம் சுகம் மற்றும் அரைக்கல்பம் துக்கம் உள்ளது. பகல் மற்றும் இரவு பாதிப்பாதி.

கட்டிடமும் புதிதாக இருப்பது பழையதாக ஆகிறது. புதிய வீட்டில் சுகம், பழைய வீட்டில் துக்கம் உள்ளது. உலகமும் புதியது மற்றும் பழையதாக ஆகிறது. அரைக்கல்பம் சுகம் உள்ளது. பிறகு மத்தியில் இருந்து துக்கம் ஆரம்பமாகிறது. துக்கத்திற்குப் பிறகு சுகம் வருகிறது. துக்கதாமத்தில் இருந்து பிறகு சுகதாமம் எப்படி உருவாகிறது, யார் ஆக்குகிறார்? இந்த உலகம் முழுவதிலும் யாருமே அறிந்திருக்க வில்லை. மனிதர்களோ, பயங்கர இருளில் உள்ளனர். சத்யுகத்திற்கு மிக நீண்ட காலம் கொடுத்து விட்டுள்ளனர். சத்யுகத்தின் ஆயுள் பெரியதாக இருக்குமானால் மனிதர்கள் எத்தனைப் பேர் இருக்க வேண்டும்? திரும்பியோ யாரும் செல்ல முடியாது. அனை வரும் ஒன்றாகச் சேர்ந்தாக வேண்டும். எப்போது தந்தை வந்து வீட்டிற்கான வழி சொல்கிறாரோ, அப்போது தான் திரும்பிச் செல்ல முடியும். இவ்வளவு ஆத்மாக்கள் அனைவருக்கும் பாபா சங்கமயுகத்தில் வந்து முழுமையாக வழியைச் சொல்கிறார். நீங்கள் அறிவீர்கள், நாம் 84 பிறவிகளின் சக்கரத்தைச் சுற்றி விட்டு வந்துள்ளோம். சத்யுக-திரேதாவில் நாம் எத்தனைப் பிறவிகள் எடுத்தோம்? அங்கே எத்தனை வருடங்கள் யார்-யார் ஆட்சி செய் கின்றனர்? அனைத்தும் உங்கள் புத்தியில் உள்ளது. சத்யுகத்தில் 16 கலை சம்பூர்ணம், பிறகு 14 கலை, பிறகு இறங்கும் கலை நடைபெறுகிறது. இச்சமயம் மிகுந்த துக்கம் உள்ளது. பழைய உலகத்தில் தான் துக்கம் ஏற்படுகிறது. சத்யுகம் புதிய உலகம் என்றும் கலியுகம் பழைய உலகம் என்றும் சொல்லப் படுகிறது. இப்போது சங்கமயுகம். இப்போது பழைய உலகத்தின் விநாசம் நடைபெறுகின்றது. தந்தை புது உலகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். நீங்கள் பழைய உலகத்திலிருந்து வெளியேறி புதிய வீட்டில் அமர்வீர்கள். நீங்கள் சொல்வீர்கள், நாம் புது வீட்டிற்காகப் புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறோம் - நாம் புது உலகில் உயர்ந்த பதவி பெற வேண்டும். தந்தை இதை மட்டும் சொல்கிறார் - என்னை நினைவு செய்யுங்கள், வேறு எந்த ஒரு கஷ்டமும் தரவில்லை. எப்படியாவது நேரம் ஒதுக்கி கட்டளையை ஏற்று நடக்க வேண்டும். ஆனால் மாயா அப்படிப் பட்டது, அது கட்டளையை ஏற்று நடக்க விடாது. தந்தையிடம் புத்தி யோகத்தை ஈடுபடுத்த விடாது. ஆனால் குழந்தைகள் நீங்கள் கல்பத்திற்கு முன்பும் கூட புருஷார்த்தம் செய்து இந்த மாயா என்ற இராவணன் மீது வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அதனால் தான் சத்யுகத்தின் ஸ்தாபனை நடைபெறுகிறது. எவ்வளவு ஒருவர் உதவியாளர் ஆகிறாரோ, அவருக்கு அந்த அளவு பலன் கிடைக்கிறது. ஆக, குழந்தைகள் இந்த ஞானத்தை உற்றார் உறவினருக்கும் கொடுக்க வேண்டும். பாபாவின் கட்டளையாவது, என்னை நினைவு செய்யுங்கள். ஏனென்றால் அரைக்கல்பத்தின் விகர்மங்களின் சுமை தலை மீது உள்ளது. அதை பஸ்பம் செய்வதற்கு நினைவு செய்வதைத் தவிர வேறு எந்த ஓர் உபாயமும் கிடையாது. கங்கை-யமுனையைப் பதீத-பாவனி எனச் சொல்கின்றனர், நாம் அதனால் தூய்மையாகி விடுவோம் எனப் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் தண்ணீரினால் பாவங்கள் எப்படி நீங்கும்? இதுவே தூய்மை இல்லாத உலகம். அதனால் அனைவரும் அழைக்கின்றனர், பதீத-பாவனா வந்து சத்யுகத்தை ஸ்தாபனை செய்யுங்கள். அதையும் பாபாவைத் தவிர வேறு யாரும் ஸ்தாபனை செய்ய முடியாது. ஆக, இது புது உலகத்திற்காகப் புதிய ஞானம். கொடுப்பவர் ஒரே ஒரு பாபா, கிருஷ்ணர் ஞானம் கொடுக்க வில்லை. கிருஷ்ணர் பதீத-பாவனர் எனச் சொல்லப் படுவதில்லை. பதீத-பாவனரோ ஒரே ஒரு பரமபிதா பரமாத்மா, அவர் புனர்ஜென்மத்தில் வருவதில்லை.

நீங்கள் அறிவீர்கள், கிருஷ்ணபுரி தான் விஷ்ணுபுரி எனச் சொல்லப் படுகின்றது. கிருஷ்ணரின் இராஜ்யம் வேறு, ராதையின் இராஜ்யம் வேறு. பிறகு அவர்களுக்கிடையில் திருமண நிச்சய தார்த்தம் நடைபெறுகின்றது. ராதை-கிருஷ்ணர் ஒன்றும் சகோதர- சகோதரியாக இருந்ததில்லை. சகோதர-சகோதரி தங்களுக்குள் திருமணம் செய்து கொள்வ தில்லை. இப்போது உங்களுடைய புத்தியில் இந்த விசயங்கள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதற்கு முன்பு இவற்றை அறியாதிருந்தீர்கள். இப்போது தெரிந்து கொண்டீர்கள், ராதை-கிருஷ்ணர் தான் பிறகு லட்சுமி-நாராயணர் ஆகின்றனர். சொர்க்கத்தின் மகாராஜா மற்றும் மகாராணி, இளவரசர், இளவரசி ராதை கிருஷ்ணர் எனப் பாடப்பட்டுள்ளது. அவர்களின் தாய்-தந்தைக்கு இவ்வளவு உயர்ந்த பதவி கிடையாது. இது ஏன் இப்படி ஆயிற்று? ஏனென்றால் அவர்களின் தாய்-தந்தை குறைவாகப் படித்துள்ளனர். இராதை- கிருஷ்ணருக்கு எவ்வளவு பெயர் உள்ளதோ, அவர்களின் தாய்-தந்தைக்கோ அந்தளவு பெயர் என்பதே கிடையாது. உண்மையில் யார் ஜென்மம் கொடுத்தனரோ, அவர்கள் அதிகம் பெயர் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை. இராதை கிருஷ்ணர் அனைவரைம் விட உயர்ந்தவர்கள். அவர்களை விட மேலானவர்கள் யாரும் கிடையாது. இராதை கிருஷ்ணர் முதல் நம்பரில் சென்றுள்ளனர். பிறகு முதல் நம்பரில் மகாராஜா மகாராணி யாகவும் ஆகியுள்ளனர். ஜென்மம் தாய்-தந்தையிடம் எடுத்துள்ளனர் என்றாலும் பெயர் அவர்களுக்கு உயர்ந்ததாகும். இதை புத்தியில் நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள் என்றாலும் இந்த சுயதரிசனச் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டே இருங்கள். இந்தச் சக்கரத்தைச் சுற்றுவதால் உங்களுடைய பாவங்கள் பஸ்ப மாகின்றன. அதாவது இராவணனின் தலை வெட்டப் படுகிறது. இது சத்யுக.. திரேதா... வின் சக்கரம் இல்லையா? நாம் தான் முதலில் தேவதையாக இருந்தோம், பிறகு சத்திரியர், வைசியர் ஆனோம். இப்போது மீண்டும் நாம் பிராமணர் ஆகியிருக்கிறோம். பிறகு நாம் தான் தேவதை ஆவோம். பாபா ஓம் என்பதன் அர்த்தத்தைத் தனியாகப் புரிய வைத்துள்ளார். ஹம் ஸோ என்பதன் அர்த்தம் தனி. சாஸ்திரங்களில் ஒன்றாக ஆக்கி விட்டுள்ளனர். அவர்கள் நினைக்கின்றனர், ஓம் என்றால் நாம் ஆத்மாவே தான் பரமாத்மா என்று. பரமாத்மா தான் ஆத்மா - இது தலைகீழானது. பாபா புரிய வைக்கிறார், ஓம் என்றால் நாம் ஆத்மாக்கள் பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள். நான் பகவான்--இது ஒன்றும் ஓம் என்பதன் அர்த்தம் கிடையாது. நாம் ஆத்மா நிராகார். நம்முடைய தந்தையும் நிராகார். சாகார சரீரத்தின் தந்தையும் சாகார். நாம் பரமாத்மாவின் குழந்தைகள் என்றால் நமக்கு சொர்க்கத்தின் இராஜ்யம் கண்டிப்பாக வேண்டும். பாபா நமக்கு சொர்க்கத்தின் இராஜ்யத்தைத் தருவதற்காக வந்துள்ளார். இராவணன் அரைக்கல்பத்திற்குப் பிறகு சாபம் கொடுக் கிறான். அதனால் நீங்கள் துக்கம் நிறைந்தவராக தமோபிரதானம் ஆகி விட்டிருக் கிறீர்கள். பிறகு பாபா வந்து சுகம் நிறைந்தவராக ஆவதற்கான வரம் கொடுக்கிறார். சிரஞ்சீவி பவ என்று பாபா சொல்வதில்லை.. ஆனால் என்னை நினைவு செய்வீர்களானால் இந்த ஜென்மத்துடன் கூடவே ஜென்ம-ஜென்மாந்தாரத்தின் பாவங்கள் என்னென்ன உள்ளனவோ, அவை பஸ்பம் ஆகி விடும் எனச் சொல்கிறார். இது யோக அக்னி எனச் சொல்லப்படுகின்றது. இராவண இராஜ்யத்தில் அனைவரும் தூய்மை இல்லாதவர்களாக ஆகியே தீர வேண்டும். தூய்மையை இழப்பது மற்றும் தூய்மையாக ஆத்மா தான் ஆகிறது. பரமாத்மாவோ சதா தூய்மையாகவே

இருப்பவர். அவர் அனைவரையும் தூய்மையாக்குகிறார். தூய்மையை இழக்க வைப்பது இராவணன். சத்யுகத்தில் விகாரங்கள் இருப்பதில்லை. அது சம்பூர்ண நிர்விகாரி உலகம். அதனால் தான் தேவதைகளுக்கு முன்பு போய்ப் பாடுகின்றனர் - நீங்கள் சர்வகுண சம்பன்னம்.... இந்த மகிமை சிவனுக்கு முன் பாடுவதில்லை. தூய்மையாக இருந்த தேவதைகள் தூய்மை இல்லாதவர்களாக ஆகின்றனர். இது விளையாட்டாகும். பாபா சுகதாமத்தை உருவாக்குகிறார். சிவனைத் தந்தை எனச் சொல்கின்றனர். சாலிகிராம் (ஆத்மா) தனி. ருத்ர யக்ஞத்தில் ஒரு பெரிய லிங்கத்தை உருவாக்குகின்றனர். மற்றப்படி சின்னச்சின்ன சாலிகிராம்களை (ஆத்மாக்கள்) உருவாக்குகின்றனர். நாம் ஆத்மா 84 பிறவிகள் எடுக்கிறோம். மற்ற தர்மத்தினர்க்கு 84 பிறவிகள் எனச் சொல்ல மாட்டார்கள். சீக்கிய தர்மத்தினர் 500 ஆண்டுகளில் எத்தனைப் பிறவிகள் எடுத்திருப்பார்கள்? நாம் எத்தனை எடுக் கிறோம்? இதை பாபா புரிய வைக்கிறார். பிராமணர்களின் குடுமி புகழ் பெற்றதாகும். உண்மையான பிராமணர்கள் இருப்பது சங்கமயுகத்தில் தான். இது கல்யாண்காரி யுகம். இங்கே தான் உங்கள் அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது. இராவணன் தீமை செய்கிறான். பாபா வந்து நன்மை செய்கிறார். ஆக, பாபாவின் வழிப்படி நடந்து நன்மை செய்துக் கொள்ள வேண்டும் இல்லையா? ஸ்ரீமத் சிவபகவான் வாக்கு - சிவபாபா ஜென்மம் எடுப்பதில்லை. அவர் பிரவேசமாகிறார். (யாரிடமாவது) பாலனை பெற்றால் தான் ஜென்மம் எனச் சொல்ல முடியும். என்னுடைய ஸ்ரீமத் படி நடந்து செல்லுங்கள் என்று மட்டும் சொல்கிறார். சொர்க்கத்தின் எஜமானர்களாக நீங்கள் ஆகுங்கள். நானோ அது போல் ஆகப் போவதில்லை. நானோ எதையும் அனுபவிப்பதில்லை (அபோக்தா).

ஆகவே புரிந்து கொள்ள வேண்டும் - பாபா ஆத்மாக்களாகிய நமக்குப் புரிய வைத்துக் கொண்டி ருக்கிறார். ஆத்மா தான் புரிந்து கொள்கிறது இல்லையா? ஆத்மா தான் வக்கீலாக, இஞ்சினீயராக ஆகிறது. நான் இன்னார். ஆத்மா சொன்னது - நான் தேவதையாக இருந்தேன். நான் 8 பிறவிகளுக்குப் பிறகு சத்திரியன் ஆனேன். 12 பிறவிகள் எடுத்தேன். அதற்குப் பிறகு தூய்மையை இழந்து விட்டேன். இப்போது பாபா சொல்கிறார், குழந்தை களே, ஆத்ம அபிமானி ஆகுங்கள். இவை புரிந்து கொள்ள வேண்டிய விசயங்களாகும். ஆத்மா சொல்கிறது, நாம் சத்யுகத்தில் இருக்கும் போது மகான் ஆத்மாவாக இருந்தோம். பிறகு மகா பாவி ஆகிவிட்டோம். அனைவரைக் காட்டிலும் மகானாக இருப்பவர், ஒரு பரமாத்மா தான். அவர் தான் எப்போதுமே தூய்மையாகவே இருக்கிறார். இங்கோ மனிதர்கள் சதா காலமும் தூய்மையாக இருப்பதில்லை. சதா தூய்மையாக சுகதாமத்தில் இருக்கின்றனர். திரேதாயுகத்திலும் கூட கொஞ்சம் கலைகள் குறைந்து கொண்டு செல்கின்றன. இப்போது நமக்கு உயரும் கலை. நாம் சொர்க்கத்தின் எஜமானர் ஆகிறோம். பிறகு திரேதாயுகத்தில் 2 கலைகள் குறைந்து விடும். பிறகு துவாபர யுகத்தில் 5 விகாரங்களின் கிரகணம் பிடிப்பதால் கருப்பாகிக் கொண்டே செல்கிறோம். இப்போது பாபா சொல்கிறார், இந்த ஐந்து விகாரங் களின் தானம் கொடுப்பீர்களானால் கிரகணம் விட்டுப் போகும். பிறகு நீங்கள் சத்யுகத்தின் சம்பூர்ண தேவதை ஆகி விடுவீர்கள். முதல்-முதலில் தேக அபிமானத்தை விடுங்கள். காமவிகாரத்தை தானமாகக் கொடுத்து விடுங்கள். கடைசியில் வந்து நஷ்டோமோஹா (முழு பற்றற்றவராக) ஆக வேண்டும். இப்போது ஆத்மாக்களாகிய உங்களுக்கு நினைவு வந்துள்ளது, நாம் நிச்சயமாக 84 பிறவிகள் எடுத்துள்ளோம். துவாபரயுகத்தில் இருந்து இராவணன் சாபமிட்டு

விட்டான். அதனால் அனைவரும் துக்கத்தில் உள்ளனர். துவாபர யுகத்தின் ராஜா-ராணி முதலானோர் நோய்வாய்ப் படாமல் இருந்திருப்பார்களா என்ன? இதுவும் துக்கமாகிறது இல்லையா? இதுவே துக்கத்தின் உலகம். சத்யுகம் சுகதாமம். ஆக, பகவானின் ஸ்ரீமத்தை ஏற்று நடக்க வேண்டும் இல்லையா? எல்லையற்ற தந்தையின் ஸ்ரீமத்தை யார் ஏற்று நடக்கவில்லையோ, அவர்கள் மிகவும் கெட்டவர் கள் எனப்படுவார்கள். கெட்ட குழந்தைக்குத் தந்தையிடம் இருந்து என்ன ஆஸ்தி கிடைக்கும்? நல்ல குழந்தைகள் ஆஸ்தியும் நல்லபடியாகப் பெறுவார்கள். அவர்கள் தாங்களும் தூய்மை யாகி மற்றவர்களையும் தூய்மையாக ஆக்குவார்கள். எல்லையற்ற தந்தை ஆத்மாக்களுக்குப் படிப்பு சொல்லித் தருகிறார் - ஹே குழந்தைகளே, காதுகளால் கேட்கிறீர்களா? சொல் கின்றனர், ஆம் பாபா, நாங்கள் உங்கள் ஸ்ரீமத் படி நடந்து நிச்சயமாக சிரேஷ்டமானவர்களாக ஆவோம். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் பகவான் என்றால் நிச்சயமாகப் பதவியும் உயர்ந்ததிலும் உயர்ந்த தாகத் தருவார் இல்லையா? சொர்க்கத்தின் ஆஸ்தி அரைக்கல்பத்திற்காகத் தருகிறார். லௌகிக் தந்தையிடமோ, எல்லைக்குட்பட்ட ஆஸ்தி தான் கிடைக்கும், அல்பக்கால சுகம். கலியுகத்தில் இருப்பது காக்கையின் எச்சத்துக்கு சமமான சுகம். அதனால் சந்நியாசி கள் வீடு-வாசலை விட்டு விடுகின்றனர். அவர்கள் இல்லற தர்மத்தை ஏற்றுக் கொள்வ தில்லை. இல்லற தர்மம் சத்யுகத்தில் உள்ளது இல்லையா? நீங்கள் அறிவீர்கள், இந்தப் படிப்பின் மூலம் நாம் விஷ்ணுபுரி செல்கிறோம். அதற்காகப் பரமபிதா பரமாத்மா நமக்குப் படிப்பு சொல்லித் தந்து கொண்டிருக்கிறார். பகவான் யார், அவருடைய காரியங்கள் என்ன, எப்படி அவர் தூய்மை இல்லாதவர்களை தூய்மையாக்குகிறார் என்பதெல்லாம் பக்தர் களுக்குத் தெரியவே தெரியாது. இப்போது நீங்கள் தூய்மையாகிக் கொண்டி ருக்கிறீர்கள். உலகம் அந்த பதீத-பாவனர் தந்தையை நினைவு செய்து கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் சங்கமயுகத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். மற்ற அனைவரும் கலியுகத்தில் உள்ளனர். கலியுகமோ இன்னும் குழந்தை என்று அவர்கள் நினைக்கின்றனர், இப்போது கலியுகத் தின் விநாசம் நடைபெறப் போகிறது என்று நீங்கள் அறிவீர்கள், இப்போது நீங்கள் சத்யுகம் செல்ல வேண்டும். பாபா உங்களுக்கு நினைவு படுத்தியுள்ளார் - நான் கல்ப- கல்பமாக உங்களுக்கு ஆஸ்தி கொடுக்கிறேன். ஆகவே ஆஸ்தியை முழுமையாக அடைய வேண்டும் இல்லையா? ஆக, நீங்கள் இங்கேயே அமர்ந்து விடுங்கள் என்று பாபா உங்களுக்குச் சொல்லவில்லை. வீட்டில் இல்லறத்திலேயே இருங்கள், இந்த சுயதரிசனச் சக்கரத்தை மட்டும் சுற்றிக் கொண்டே இருங்கள் மற்றும் நஷ்டோமோஹா (முழு பற்றற்ற வராக) ஆகி விடுங்கள். ஒரு சிவபாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை. நாம் அறிவோம், இப்போது நம்முடைய புதிய சம்மந்தம் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே பழையதின் மீது பற்றுதல் இருக்கக் கூடாது. புதிய உலகம், புதிய ராஜதானி மீது பற்றுதல் வைக்க வேண்டும். இப்போதோ மரணம் முற்றிலும் தலை மீது சவாரி செய்து கொண்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. சத்யுகத்தில் அகால மரணம் ஏற்படுவதில்லை. சமயத்தில் ஒரு பழைய சரீரத்தை விட்டுப் புதியதை எடுத்துக் கொள் வார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்கு தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சுயதரிசனச் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டே முழுமையாகப் பற்றற்றவராக ஆக வேண்டும். மரணம் தலை மீது உள்ளது. அதனால் அனைத்தின் மீதும் வைத்த மோகத்தை விட்டு விடவேண்டும்.

2. தந்தையிடம் இருந்து ஆஸ்தி பெறுவதற்காக முழுமையாக ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். ஆத்ம அபிமானி ஆகி நல்ல குழந்தை ஆக வேண்டும்.

வரதானம் : மனம் மற்றும் புத்தியை சதா சேவையில் பிசியாக வைத்துக் கொள்ளக் கூடிய தடைகளற்ற சேவாதாரி ஆகுக.

யார் எந்த அளவிற்கு சேவையில் ஆர்வம், உற்சாகத்துடன் இருக்கிறார்களோ, அந்த அளவிற்கு தடைகளற்றவர்களாக இருப்பார்கள். ஏனெனில் சேவையில் புத்தி பிசியாக இருக்கிறது. கா-யாக இருப்பதனால் வேறு ஏதாவது உள்ளே வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பிசியாக இருப்பதனால் எளிதாக தடைகளற்றவர்களாக ஆகிவிகிறீர்கள். மனம் மற்றும் புத்தியை பிசியாக வைத்துக் கொள்ள அதற்கான கால அட்டவனை (டைம் டேபிள்) உருவாக்குங்கள். சேவை அல்லது சுயத்திற் காக என்ன இலட்சியம் வைத்திருக் கிறீர்களோ அந்த இலட்சியம் நடைமுறையில் கொண்டு வருவதற்கு இடையிடையில் அவசியம் கவனம் செலுத்த வேண்டும். கவனம் ஒருபோதும் இறுக்கமாக (டென்சன்) மாறி விடக் கூடாது. எங்கு இறுக்கம் இருக்கிறதோ, அங்கு கடினம் ஆகிவிடுகிறது.

சுலோகன்: சேவையின் மூலம் அடையும் ஆசிர்வாதம் தான் ஆரோக்கியமாக இருப்பதற்கான சாதனமாகும்.